<u>**DEPOSITION OF WITNESS**</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| Name | முருகன் | -- | |
|---|---|---|---|
| Father's Name | சேது மாரியப்பன் | Calling | ஜவுளி வியாபாரம் |
| Village | சுந்தரபாண்டியம் | Religion | இந்து |
| Taluk | வத்ராப் | Age | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 02[nd] day of June 2025.

<u>**முதல் விசாரணை**</u>

நான் வத்ராப் தாலுகா, சுந்தரபாண்டியம், செக்கடி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். 07.06.2018 ம் தேதி எனது சித்தப்பா மகன் சுந்தரவேல் என்பவரை பார்ப்பதற்காக நான் திருவில்லிபுத்தூர் செக்கடி தெருவிற்கு சென்றிருந்தேன். அப்போது அவன் என்னிடம் செண்பகதோப்பிற்கு குளிக்க செல்லலாம் என்று என்னை அழைத்தான். நானும் சரி வருகிறேன் என்று சொன்னேன். மேலும் சுந்தரவேலின் தம்பி சுந்தர்ராஜ் என்பவர் ஏற்கனவே செண்பகதோப்பிற்கு குளிக்க சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். நானும் சுந்தரவேலும் அவருடைய ஹீரோ ஸ்பிளண்டர் ப்ளஸ் என்ற இருசக்கர வாகனத்தில் கிளம்பி சென்றோம். எனது தம்பி சுந்தரவேல் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் நாங்கள் செண்பகதோப்பு ரோட்டிலுள்ள கம்பதோப்பு ரோட்டிற்கு அருகே சென்றுக்கொண்டிருக்கும்போது எங்களுக்கு பின்புறத்திலிருந்து எங்களை வேகமாகஒரு டிராக்டர் முந்தி சென்றது. மேலும் எங்களுக்கு எதிரில் வந்துக்கொண்டிருந்த ஒரு டுவிலரில் மேற்படி டிராக்டர் மோதிவிட்டது. நாங்கள் சென்ற வாகனத்தை நிறுத்திவிட்டு பார்த்தபோது மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்திருந்த 3 நபர்கள் அடிப்பட்டு கிழே கிடந்தார்கள். நான் பார்த்தபோது மேற்படி மூவரில் ஒரு நபர் எனது சித்தப்பாவின் மகனான சுந்தர்ராஜ் ஆவார். மேற்படி சுந்தர்ராஜிற்கு அவருடைய இடுப்பில் காயம் ஏற்பட்டிருந்தது. உடனடியாக காயப்பட்ட மூவரையும் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அதில் ஏற்றினோம். ஆம்புலன்சில் வந்த நபர் காயப்பட்ட மூவரையும் பரிசோதித்து அதில் ஒரு நபர் இறந்துபோய்விட்டதாக தெரிவித்தார். அவரையும் காயப்பட்ட மற்ற மூவரையும் ஆம்புலன்சில் ஏற்றி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு

சென்றார்கள். அதன் பிறகு சிறிது நேரத்தில் நாங்களும் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வந்த போலீசார் நடந்த சம்பவம் பற்றி எங்களிடம் விசாரித்தார்கள். மேற்படி காயப்பட்ட இருவருக்கும் அரசு மருத்தவமனையில் முதல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பி வைத்தார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதிய டிராக்டரை ஓட்டி வந்தவர் வேகமாக வண்டியை ஓட்டி சென்றதால் நான் அவரை அப்போது பார்க்கவில்லை. அதன் பிறகு நான் என்னுடைய வேலை நிமித்தமாக மருத்துவமனையிலிருந்து உடனே சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.
மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 02nd day of June 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**